மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24 ஆம் நாள் புதன்கிழமை
இ.ம.எண்.04/2020
அ.வ.எண்.23/2014

கண்ணுபையன் ...மனுதாரர்/வாதி

/எதிராக/

1. மலர்விழி
2. அறிவுக்கரசன்
3. அரவிந்தன்
4. கண்காணிப்பு பொறியாளர்,
   O & M தமிழ்நாடு மின்சாரவாரியம்,
   மேட்டூர் அணை.

5. செயற் பொறியாளர்,
   O & M தமிழ்நாடு மின்சாரவாரியம்,
   மேட்டூர் அணை.

6. உதவி செயற் பொறியாளர்,
   O & M தமிழ்நாடு மின்சாரவாரியம்,
   மேட்டூர் அணை.

7. உதவிப் பொறியாளர்,
   O & M தமிழ்நாடு மின்சாரவாரியம்,
   குஞ்சாண்டியூர். ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 15.02.2021 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.வைத்திலிங்கம் அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.G.மாலதி அவர்கள் ஆஜராகியும், 3 ம்எதிர்மனுதாரர் அசல் வழக்கிலேயே தோன்றாதரப்பினராகவும், 4 முதல் 7 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.P.சித்தன் அவர்கள் ஆஜராகியும், 4 முதல் 7 எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல் செய்யாத நிலையில் இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 3 விதி 1 மற்றும் பிரிவு 151ன் கீழ் வழக்கில் வாதியாகிய மனுதாரரின் தந்தைக்கு பதிலாக பொது அதிகார முகவரான மனுதாரரை விசாரிக்கவும், இவ்வழக்கை முன்னின்று நடத்தவும், சாட்சியம் அளிக்கவும் அனுமதி அளித்து உத்தரவிடக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

அசல் வழக்கானது சிறப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்தது. வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு மனுதாரர்/வாதிக்கு இதயத்தில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர்/வாதிக்கு பக்கவாதம் ஏற்பட்டு ஒரு கை, கால் செயல் இழந்துவிட்டது. எனவே மனுதாரர்/வாதியால் மேற்படி வழக்கில் சாட்சியம் அளிக்கும் அளவிற்கு உடல்நிலை இல்லை. மனுதாரரின் மகன் மகாலிங்கத்துக்கு வழக்கின் சங்கதிகள் குறித்து ஆரம்பத்திலிருந்தே நன்கு தெரியும் என்பதாலும், வழக்கை முன்னின்று நடத்துவதற்காக அவருக்கு அதிகாரம் கொடுத்து, ஒரு பொது அதிகாரப்பத்திரம் எழுதி மேட்டுர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 22.08.2019ல் ஆவணஎண்.25/2019 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே வழக்கில் வாதிக்கு பதிலாக அவருடைய மகனும், பொது அதிகார முகவருமான மனுதாரரை விசாரிக்கவும், இவ்வழக்கை முன்னின்று நடத்தவும், சாட்சியம் அளிக்கவும் அனுமதி அளித்து உத்தரவிடக் கோரி மனுதாரர்/வாதியின் மகன் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

<u>2) 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு மற்ற எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

மனுதாரர் ஏற்கனவே பொது அதிகாரப்பத்திரம் பெற்றுள்ளதால் வழக்கினை திருத்தியதற்கு பின்னிட்டு தான் சாட்சியம் அளிக்க முடியும். வழக்கினை திருத்தாமல் இம்மனுவை தாக்கல் செய்ய மனுதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை. பிரமாணப்பத்திரிக்கை பத்தி 3ல் உள்ள 22.08.2019 தேதியிட்ட பொது அதிகாரப் பத்திரம் குறித்த சங்கதிகளை தவிர மற்ற அனைத்து சங்கதிகளும் பொய்யாகும்.

மனுதாரர் ஏற்கனவே தாக்கல் செய்த இ.ம.எண்கள்.01/2019, 02/2019, 03/2020 ஆகியவற்றை குறித்து இம்மனுவில் பிரமாணப்பத்திரிக்கையில் கூறவில்லை. மேற்படி அனைத்து இடைநிலை மனுக்களும் வலியுறுத்தவில்லை. எனவே இம்மனு முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதால் தள்ளுபடி செய்யத்தக்கதாகும். கட்டளை 3 விதி 1ன் கீழ் வாதி தனக்காக ஏஜெண்டையோ அல்லது வழக்கறிஞரையோ தனக்கு சார்பாக நியமித்து கொள்ளலாம். ஆனால் மனுதாரர் வழக்கறிஞரை 22.08.2019 தேதியிட்ட பொது அதிகார பத்திரத்தின் அடிப்படையில் நியமிக்க உரிமையில்லை. ஏனெனில் authorized cannot authorize another என்பதால் இம்மனு நிராகரிக்கத்தக்கதாகும். உண்மையான சங்கதிகளை மறைத்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தவில்லை. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

<u>4) பிரச்சினை :</u>–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர் தரப்பில் வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு மனுதாரர்/வாதிக்கு இதயத்தில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது எனவும், மேலும் மனுதாரர்/வாதிக்கு பக்கவாதம் ஏற்பட்டு ஒரு கை, கால் செயல் இழந்துவிட்டது எனவும், அவருடைய மருத்துவ சான்றிதழ்கள் ம.சா.ஆ.2 மற்றும் 3 எனவும், எனவே வாதியால் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கும் அளவிற்கு உடல்நிலை இல்லை எனவும், மனுதாரரின் மகன் மகாலிங்கத்துக்கு வழக்கின் சங்கதிகள் குறித்து ஆரம்பத்திலிருந்தே நன்கு தெரியும் என்பதாலும், வழக்கை முன்னின்று நடத்துவதற்காக அவருக்கு ம.சா.ஆ.1 அதிகாரம்

கொடுத்து, ஒரு பொது அதிகாரப்பத்திரம் எழுதி மேட்டூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும், எனவே இவ்வழக்கில் வாதிக்கு பதிலாக அவருடைய மகனும், பொது அதிகார முகவருமான மனுதாரரை விசாரிக்கவும், இவ்வழக்கை முன்னின்று நடத்தவும், சாட்சியம் அளிக்கவும் அனுமதி அளித்து உத்தரவிடக் கோரி மனுதாரர்/வாதியின் மகன் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் ஏற்கனவே பொது அதிகாரப்பத்திரம் பெற்றுள்ளதால் வழக்கினை திருத்தியதற்கு பின்னிட்டு தான் சாட்சியம் அளிக்க முடியும் எனவும், வழக்கினை திருத்தாமல் இம்மனுவை தாக்கல் செய்ய மனுதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை எனவும், பிரமாணப்பத்திரிக்கை பத்தி 3ல் உள்ள 22.08.2019 தேதியிட்ட பொது அதிகாரப் பத்திரம் குறித்த சங்கதிகளை தவிர மற்ற அனைத்து சங்கதிகளும் பொய் எனவும், மனுதாரர் ஏற்கனவே தாக்கல் செய்த இ.ம.எண்கள்.01/2019, 02/2019, 03/2020 ஆகியவற்றை குறித்து இம்மனுவில் பிரமாணப்பத்திரிக்கையில் கூறவில்லை எனவும், மேற்படி அனைத்து இடைநிலை மனுக்களும் வலியுறுத்தவில்லை எனவும், எனவே இம்மனு முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதால் தள்ளுபடி செய்யத்தக்கது எனவும், கட்டளை 3 விதி 1ன் கீழ் வாதி தனக்காக ஏஜெண்டையோ அல்லது வழக்கறிஞரையோ தனக்கு சார்பாக நியமித்து கொள்ளலாம் எனவும், எனவே மனுதாரர் வழக்கறிஞரை 22.08.2019 தேதியிட்ட பொது அதிகார பத்திரத்தின் அடிப்படையில் நியமிக்க உரிமையில்லை எனவும், ஏனெனில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட நபர் மற்றொருவரை அங்கீகரிக்கப்பட்ட நபராக நியமிக்க முடியாது எனவும், எனவே உண்மையான சங்கதிகளை மறைத்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

(iii) 1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கினை திருத்தாமல் இம்மனுவை தாக்கல் செய்ய முடியாது என கட்சி செய்யப்பட்டுள்ளது. ஆனால் பொது அதிகார முகவர் வழக்கினை நடத்த அனுமதி வழங்கப்பட்டால் தான் அவருடைய பெயரை வழக்குரையில் சேர்க்க அனுமதி வழங்கப்படும். அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டதற்கு

பின்னிட்டு தான் வழக்கினை திருத்த முடியும். எனவே பொது அதிகார முகவருக்கு அனுமதி வழங்கப்படாத நிலையில் வழக்கினை திருத்த முடியாது என்பதால் 1,2 ம்எதிர்மனுதாரர்களின் கட்சி ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(iv) இ.ம.எண்கள்.01/2019, 02/2019 ஆகிய மனுக்கள் பொது அதிகார முகவர் வழக்கில் சாட்சியமளிக்க அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்டு வலியுறுத்தப்படவில்லை என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி மனுக்கள் தகுதியின் அடிப்படையில் தீர்மானிக்காமல் வலியுறுத்தப்படவில்லை என தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால் இடைநிலை மனுக்களில் ஏற்பட்ட உத்தரவு இம்மனுவிற்கு முன்தீர்ப்பு தடையாக அமையாது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(v) மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.03/2020 என்பது ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அந்த மனுவிலுள்ள சங்கதிகளும், இந்த மனுவிலுள்ள சங்கதிகளும் வெவ்வேறானது என்பதாலும், பரிகாரம் வெவ்வேறு என்பதாலும் முன்தீர்ப்பு தடை என்கிற கேள்வியே எழவில்லை என்பதால் இ.ம.எண்.03/2020ன் உத்தரவு இம்மனுவிற்கு முன்தீர்ப்பு தடையாக அமையும் என 1ம்எதிர்மனுதாரர் தரப்பில் முன்வைத்த கட்சி ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(vi) 1ம்எதிர்மனுதாரர் தரப்பில் authorized cannot authorize another என்பதால் மனுதாரர் வழக்கறிஞரை நியமிக்க உரிமையில்லை என கட்சி செய்யப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரர் பொது அதிகார பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள செயல்களை செய்வதற்காக வழக்கறிஞரை நியமிக்கவில்லை. மாறாக இவ்வழக்கினை நடத்துவதற்காக வழக்கறிஞருக்கு அதிகாரம் கொடுத்துள்ளார். எனவே மனுதாரர் வழக்கறிஞரை நியமிக்க முடியாது என 1ம்எதிர்மனுதாரர் தரப்பில் முன்வைத்த கட்சி ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(vii) 1ம்எதிர்மனுதாரர் தரப்பில் வாதி மனுதாரரான தன்னுடைய மகனுக்கு பொது அதிகாரப்பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளதை மறுக்கவில்லை. இந்நிலையில் பொது

அதிகார ஆவணம் ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1 லிருந்து மனுதாரர்/வாதி தன்னுடைய மகனுக்கு பொது அதிகாரப் பத்திரம் எழுதிக் கொடுத்து அது சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.25/2019 என பதிவு செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. எனவே மனுதாரர்/வாதி தன்னுடைய மகனான மகாலிங்கத்திற்கு பொது அதிகாரப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(viii) ம.சா.ஆ.1 யை பரிசீலனை செய்ததில் மனுதாரர்/வாதி இவ்வழக்கினை நடத்தவும், சாட்சியம் அளிப்பதற்காகவும், இதர நடவடிக்கைகளுக்காகவும் தன்னுடைய மகன் மகாலிங்கத்திற்கு அதிகாரம் வழங்கியுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் மனுதாரர் தன்னுடைய மனுவில் தன்னுடைய தகப்பனாருக்கு பக்கவாதம் ஏற்பட்டு உடல்நிலை சரியில்லை என கூறி, அதற்காக ம.சா.ஆ.2 மற்றும் ம.சா.ஆ.3 ஆகிய மருத்துவ சான்றிதழ்களை முன்னிலைப்படுத்தியுள்ளார். ம.சா.ஆ.3 யை பரிசீலனை செய்ததில் வாதி hemiplegia பாதிக்கப்பட்டு, சிகிச்சையில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி hemiplegia என்பது பக்கவாதம் ஆகும். அதனை ம.சா.ஆ.2 மூளையில் எடுக்கப்பட்ட ஸ்கேன் அறிக்கையும் உறுதி செய்கிறது. இந்நிலையில் வாதி மனுதாரருக்கு எழுதிக் கொடுத்துள்ள ம.சா.ஆ.1 லும் தனக்கு பக்கவாதம் ஏற்பட்டு, ஒரு கை மற்றும் ஒரு கால் செயலிழந்துவிட்டது என கூறியுள்ளார். இந்நிலையில் ம.சா.ஆ.1 பொது அதிகாரப் பத்திரத்தில் உள்ள சங்கதிகளை 1ம்எதிர்மனுதாரர் மறுக்காததால் ம.சா.ஆ.1 முதல் 3 வரையிலான சான்றாவணங்களிலிருந்து வாதிக்கு பக்கவாதம் ஏற்பட்டு, உடல்நிலை சரியில்லாமல் உள்ளார் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(ix) ம.சா.ஆ.1 மற்றும் மனுவில் வாதியின் மகனான மனுதாரருக்கு வழக்கு சங்கதிகள் அனைத்தும் தனக்கு தெரியும் என கூறியுள்ளார். எனவே மனுதாரர் தனக்கு நேரடியாக தெரிந்த சங்கதிகள் குறித்து சாட்சியமளிக்க எவ்வித தடையும் இல்லை. எனவே ம.சா.ஆ.1 பொது அதிகார பத்திரத்தின்படிக்கு வாதிக்காக அவருடைய மகனான மனுதாரர் இவ்வழக்கினை நடத்தவும், சாட்சியமளிக்கவும் பொதுஅதிகாரம் வழங்கியுள்ளதால் இவ்வழக்கில் வாதிக்கு பதிலாக வழக்கினை நடத்தவும், சாட்சியம்

அளிக்கவும் வாதியின் மகனான மனுதாரருக்கு அனுமதி வழங்கலாம் எனவும், இம்மனு அனுமதிக்கத்தக்கது எனவும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனு அனுமதிக்கப்பட்டும், அவரவர் செலவுத்தொகைகளை அவரவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டுமெனவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்:– இல்லை</u>

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 22.08.2019 | பொது அதிகார ஆவணம் | அசல் |
| ம.சா.ஆ.2 | 04.09.2014 | எம்.ஆர்.ஐ. ஸ்கேன் ரிப்போர்ட் | அசல் |
| ம.சா.ஆ.3 | 22.06.2015 | மருத்துவ சான்றிதழ் | அசல் |

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.